# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8097134

1. District மாவட்டம் : KRISHNAGIRI PS: காவல்நிலையம் VKAC KRISHNAGIRI Year: ஆண்டு 2018 FIR No.: மு.த.அ. எண் 8/AC/2018 Date: நாள் 06.09.18

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: u/s 7(a)
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை At 11 hrs on a day during last week and 05.09.2018
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை between 12.00hrs and 16.20hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : நேரம் 05.09.2018 at 17.15 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம் 05.09.2018 at 17.15 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் Approximately 500meter, East
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Office of the Project Director, Collector's office building, Krishnagiri
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K. Jayakumar (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Karthikeyan
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 42 years (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் (g) Address : முகவரி Door No.21, T.B. Link Road, Krishnagiri.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) Tr. Narasimman, Project Director, Collector's office building, Krishnagiri
   2) Tr. Sathyamurthi, Assistant, O/o Project Director, Krishnagiri.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   - No delay -

GCP 240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheets are enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 6/9/2018

[signature] 6/9/18

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
06-09-2018 / 11.00hrs.

Name: பெயர் G. V. KIRUSHNAA RAAJAN
Rank: நிலை Dy. Supdt of Police No. எண்
VKAC, Krishnagiri

[signature]

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

**கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண். 8/AC/2018 u/s 7(a) of the Prevention of Corruption (Amendment) Act 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி**

கிருஷ்ணகிரி, க.எண்.21 பயணியர் மாளிகை ரோடு, கார்த்திகேயன் மகன் திரு.கா.ஜெயகுமார் என்பவர் நேற்று 05.09.2018 தேதி மாலை 17.15 மணிக்கு கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் காவல் துணைக் கண்காணிப்பாளர் முன்பு ஆஜராகி, கிருஷ்ணகிரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.நாசிம்மன் மற்றும் உதவியாளர் திரு.சத்தியமூர்த்தி ஆகியோர்மீது நடவடிக்கை எடுக்குமாறு ஒரு எழுத்து மூலமான புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் அடிப்படையில் எதிரிகளின் பொதுவான நற்பெயர் குறித்து இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் சரியில்லை என்றும் புகார்தாரரின் முன்நடத்தை மற்றும் அவருக்கும் எதிரிகளுக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு ஏதுமில்லை என்றும் அவருடைய புகார் நம்பகத்தன்மை கொண்டது என்றும் தெரிய வந்ததால் இன்று 06.09.2018ம் தேதியன்று காலை 07.30 மணிக்கு எதிரிகள் மீது கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண் 8/AC/2018 u/s 7(a) of the Prevention of Corruption (Amendment) Act 2018 ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகார்தாரரின் எழுத்துமூலமான புகாரின் விவரம் பின்வருமாறு.

அனுப்புதல்

கா.ஜெயக்குமார்,<br>
S/o கார்த்திகேயன்,<br>
க.எண்-21, பயணியர் மாளிகை குறுக்கு தெரு,<br>
கிருஷ்ணகிரி.

பெறுதல்

காவல் துணை கண்காணிப்பாளர்,<br>
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை,<br>
கிருஷ்ணகிரி.

அய்யா,

நான் கிருஷ்ணகிரியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 10 வருடங்களாக அரிசி வியாபாரம் செய்து வருகிறேன். தொழில் நிமித்தம் அரிசியை இருப்பு வைத்து வியாபாரம் செய்வதற்காக கிருஷ்ணகிரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை

கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டுவரும் கிருஷ்ணகிரி நகரத்திலோ அல்லது ஊராட்சியிலோ ஏதாவது ஒரு கடையை மாத வாடகைக்கு ஒதுக்கி தருமாறு கோரி போன வாரத்தில் ஒரு நாள் கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட திட்ட இயக்குனர் திரு.நரசிம்மன் அவர்களை சந்தித்து விண்ணப்பம் கொடுத்தேன். அப்போது அந்த அலுவலகத்தில் பணிபுரியும் உதவியாளர் திரு.சத்தியமூர்த்தி என்பவரும் என்னுடன் வந்தார். விண்ணப்பம் கொடுத்தபிறகு உதவியாளர் சத்தியமூர்த்தி மாவட்ட திட்ட இயக்குனருக்கும் தனக்கும் லஞ்சமாக ரூ.15,000/- தரவேண்டும் என்று அன்று காலை சுமார் 11.00 மணியளவில் அதே அலுவலகத்தில் வைத்து என்னிடம் கேட்டார். அதற்கு நான் தொகை அதிகமாக உள்ளது என்னால் அவ்வளவு பணம் தரமுடியாது என்று சொன்னேன். அப்போது அவர் கிருஷ்ணகிரி நகர டி.டி.டி.சி கட்டிடத்தில் கடைகள் காலியாக எதுவும் இல்லை. அதனால் கட்டிகானப்பள்ளி ஊராட்சியில் மாவட்ட மைய நூலகத்திற்கு எதிரில் உள்ள கடைகள் இரண்டு காலியாக உள்ளன என்றும், அதில் ஒன்றை ஒதுக்கிதருவதாகவும், பணம் ரூ.15,000/- தராவிட்டால் வேறு யாருக்காவது ஒதுக்கப்பட்டுவிடும் என்று சொன்னார். அதற்கு பின்பு இன்று 05.09.2018 ஆம் தேதி காலை சுமார் 11.45 மணியளவில் நான் மாவட்ட திட்ட இயக்குனரின் அலுவலகத்திற்கு சென்றேன். அங்கு உதவியாளர் சத்தியமூர்த்தி என்பவர் இல்லாததால் கொஞ்சநேரம் கழித்து மதியம் சுமார் 12.00 மணியளவில் என்னுடைய மொபைல் எண் 9443805344 என்ற எண்ணில் இருந்து அவருடைய மொபைல் எண் 8825527758 என்ற எண்ணிற்கு தொடர்புகொண்டு விவரம் கேட்டபோது, ஏற்கனவே தான் கேட்ட பணம் ரூ.15,000/- கொண்டுவந்துவிட்டீர்களா என்று கேட்டார். அதற்கு நான் இன்னும் இல்லை. அவ்வளவு பணம் தரவேண்டுமா என்று கேட்டதற்கு, ஆமாம் மாவட்ட திட்ட அலுவலருக்கும், எனக்கும் மற்றும் மற்ற அலுவலர்களுக்கும் கொடுத்தால்தான் வேலையாகும் என்று திட்டவட்டமாக சொல்லிவிட்டார். இது சம்மந்தமாக மாவட்ட திட்ட இயக்குனர் நரசிம்மனை சந்தித்து அவரிடம் முறையிடலாம் என்று முடிவுசெய்து இன்று 05.09.2018 ஆம் தேதி மாலை சுமார் 4.20 மணிக்கு மாவட்ட திட்ட இயக்குனரின் அலுவலகத்திற்கு சென்றேன். அங்கிருந்த அலுவலக உதவியாளரிடம் எனது கடை விஷயமாக அய்யாவை பார்க்கவேண்டும் என்று சொன்னேன். கொஞ்சநேரம் கழித்து அவரும் என்னை மாவட்ட திட்ட இயக்குனரின் அறைக்கு அழைத்துசென்றார். மாவட்ட திட்ட இயக்குனர் நரசிம்மனிடம் உதவியாளர் சத்தியமூர்த்தி எனக்கு கடை ஒதுக்கீடு செய்வது தொடர்பாக ரூ.15,000/- லஞ்சம் கேட்கிறார் என்றும் அதில் தங்களுக்கும் தரவேண்டியிருக்கிறது என்று சொன்னதால் எனக்கு உதவிசெய்யுமாறு தங்களை

நேரில் பார்க்கவந்தேன் என்று சொன்னேன். அதற்கு அவர் சத்தியமூர்த்தி சொன்னதுபோல் செய்யுங்கள் என்றார். நான் என்னால் அவ்வளவு முடியாதுங்க சார் என்று சொன்னதற்கு இது சம்மந்தமாக அவரிடமே நீங்கள் பேசிக்கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டு என் அருகில் இருந்த உதவியாளரிடம், என்னை அழைத்துக்கொண்டுபோய் கண்காணிப்பாளரை பார்க்குமாறு என்னிடமும், அவரிடமும் சொன்னார். அதன்படி அந்த அலுவலக உதவியாளர் என்னை கண்காணிப்பாளரிடம் அழைத்துக்கொண்டுபோய் அவரிடம் விவரம் தெரிவித்தபோது இது சம்மந்தமான கோப்புகளை வேறு ஒரு உதவியாளர் கவனித்துவருவதாகவும் அவர் இன்று லீவு என்பதால் நாளை வந்து பார்க்குமாறும் கண்காணிப்பாளர் என்னிடம் தகவல் சொன்னார். உதவியாளர் சத்தியமூர்த்தி அவர்கள் லஞ்சம் கேட்ட விவரத்தை நான் மாவட்ட திட்ட இயக்குனர் நரசிம்மன் அவரிடம் சொல்லி முறையிட்டபோதும் எனக்கு நியாயம் கிடைக்கவில்லை. சத்தியமூர்த்தி கேட்ட ரூ.15,000/- யை அவரும் கொடுக்கசொல்லிவிட்டார். அதனால் அவர்கள் இருவருக்கும் லஞ்சமாக பணம் கொடுத்து நான் கடையை ஒதுக்கீடு பெற எனக்கு விருப்பமில்லை. அவர்கள் இருவரும் கேட்ட பணம் ரூ.15,000/- த்துடன் நாளை அவர்களை சந்திக்கவுள்ளேன். ஆகவே என்னிடம் லஞ்சமாக பணம் கேட்ட அந்த இரு அரசு அலுவலர்கள் மீதும் சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு தங்கள் உண்மையுள்ள ஒப்பம் திரு.கா.ஜெயகுமார் 5.9.2018. முதல் தகவலறிக்கையின் அசல் மற்றும் புகார் ஆகியவற்றை மேன்மைமிகு சிறப்பு நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு இவ்வழக்கின் விசாரணை என்னால் எடுத்துக் கொள்ளப்பட்டது.

6/9/18

Dy. Supdt. of Police,
Krishnagiri V&AC.